# பாலர் பாடல்



திருமதி. வி. பாக்கியநாதன். B.A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பாடல்

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

திருமதி. வி.பாக்கியநாதன் B.A

-முதற்பதிப்பு-
1.1.1989

இரண்டாம் பதிப்பு
1.5.1995

வெளியீடு – கலைவிளக்கு
Droote.13
44328 Dortmund

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயிர் எழுத்து**

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| உ | ஊ | எ | ஏ |
| ஐ | ஒ | ஓ | ஔ |

ஃ

**மெய் எழுத்து-**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள்


| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

1 2 3 4 5 6 7 8 9 10

சித்திரங்களின் தழுவல் "பாலர் தமிழ்" த. துரைசிங்கம் B.A(Hons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்



ஆண்டவன் எங்கும் இருக்கின்றான்
ஆலயம் தனிலே குடி கொண்டான்
அனுதினம் அவனைத் தொழுதிடுவோம்
அவனருள் தன்னைப் பெற்றிடுவோம்.

காலையும் மாலையும் வணங்கிடுவோம்
கவலையைக் கூறி முறையிடுவோம்
என்றும் அவன் கழல் தொழுதிடுவோம்
எமக்கு நீயே கதி என்போம்.

ஆண்டவன் தானே எமைப்படைத்தான்
அவனை நினைத்தல் நம் கடனே.
என்றும் துணையாய் எமக்கிருப்பான்
உலகினைக் காத்திடும் கருணையாளன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழி



எங்கள் தாய்மொழி தமிழ்மொழி
என்றும் எமக்கு இனிய மொழி
தமிழே எங்கள் மழலை மொழி
தாயைப் போன்ற சிறந்த மொழி

நல் மொழி கூறும் நாத மொழி
நம் மொழி என்றும் பழமை மொழி
நானிலம் போற்றும் நல்ல மொழி
நீதி நூல்கள் நிறைந்த மொழி.

பாவலர் போற்றும் பிரிய மொழி
நாவலர் வளர்த்த வசன மொழி
நால்வேதம் புகழும் எங்கள் மொழி
நாயனர் போற்றிட இசைந்த மொழி.

நாம் என்றும் போற்றுவோம் நம் மொழியே,
நம் மொழி என்றும் தமிழ் மொழியே
தமிழ் மொழி என்றென்றும் வாழியவே
தரணியில் இதன்புகழ் ஓங்குகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் பெற்றோர்







அன்புள்ள அப்பா அம்மாவே
அன்புடன் எம்மை ஆதரிப்பீர்,
சின்னப் பிழைகள் நாம் செய்தால்
சகித்துப் பொறுத்து, திருத்திடுவீர்.

உண்ண உணவு தந்து விடும்
என்னருமைஅம்மாதான்
கண்ணை இமை காப்பது போல்
காக்கும் எந்தன் அம்மா தான்.

பள்ளிக்குக் கூட்டிச் சென்றுவிடும்
பாசமுள்ள அப்பா தான்
பாடம் சொல்லித் தந்து விடும்
பிரிய முள்ள எந்தன் அப்பாவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெய்வம்




அம்மா எங்கள் அம்மா
இதயம் இனிக்கும் அம்மா
எம்மை நன்ருய் காப்பாள்
இடர் வராது பார்ப்பாள்.

வேளைக்கு உணவு தருவாள்
வேண்டிய தெல்லாம் தருவாள்
அன்பை எம்மீது பொழிவாள்
அவளுக்கு எதுவும் இணையில்லை

கண்ணைப் போன்று காப்பாள்
கவலை யெல்லாம் துடைப்பாள்
தான் உண்ணுது அளிப்பாள்
தாயே எங்கள் தெய்வமாவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை எங்கள் தாய் நாடு
இனிய நல்ல வள நாடு
ஆழி சூழ்ந்த அழகு நாடு
ஆறுகள் மலைகள் நிறை நாடு

மாங்காய் உருவம் ஆனதீவு
வங்காளக் கடலில் மிதக்கும் தீவு
பாரதக் கண்டத்தின் பதக்கமாம்
பாங்குடன் அமைந்த ஈழமாம்

தென்னையொடு பனையும் நிறை நாடு
தேயிலை விளையும் இறப்பரோடு
கடல் படு திரவியம் இதனோடு
அந்நியர் வந்தனர் கருத்தோடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாடசாலை



எங்கள் பாடசாலை
இனிய தமிழ்ச் சோலை
நாம் வருவோம் காலை
நன்றே கற்போம் பல்கலை
நாளும் மீட்போம் அவை தனை
மதித்திடுவோம் நாம் குரு சொல்லை
மறந்து மீறோம் அவர் சொல்லை.
ஐயம் எதிலும் இல்லையென
அனைத்தும் விளங்கக் கற்றிடுவோம்
கல்விக்கு இங்கே இல்லை விலை
கல்விச்சாலை எங்கள் அறிவுச் சோலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி



அன்னை தந்தை சொல் கேட்டு
ஆய கலைகள் கற்றிடுவோம்
இனிய பண்பு பல கற்று
ஈ எறும்பை வதைக்காது
உழைத்தே உண்டு வாழவேண்டும்.
ஊக்கம் நெஞ்சில் உருவாகி
எல்லோரும் ஓரேகுலம் என்றிட்ட
ஏகக் கருத்தை ஏற்றிடுவோம்
ஐயம் யாவும் அகற்றி நாம்
ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவோம்
ஓதாமல் இருக்க வேண்டாம் என்ற
ஔவை சொல்லைக் கேட்பமே
அஃதே எங்கள் கடன் அன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் நாம்





பள்ளிக்குப் போகும் பாலர் நாம்
பாடம் நன்கு படித்திடுவோம்
கள்ளம் எதுவும் செய்யோம் நாம்
கடவுளை நாளும் வணங்கிடுவோம்
துள்ளிக் குதிக்கும் சிறுவர் நாம்
துணிவாய் யாவும் செய்திடுவோம்
வெள்ளையுள்ளம் கொண்டோம் நாம்
வேதனை யாவும் உணர்ந்தறியோம்
பிள்ளைகள் என்றே நாமின்று
பெற்றோர் குரு சொல் கேட்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள்



வண்ண வண்ணப் பூக்கள்
வடிவு கொண்ட பூக்கள்
மண்ணில் அழகு ஜொலிக்க
மணம் வீசும் பூக்கள்.

காலையில் மலரும் பூக்கள்
கடவுளுக்குச் சாத்திடும் பூக்கள்
மாலை கட்ட உதவுவாய்
மங்கையர் உன்னை விரும்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை



மழையே மழையே போ! போ!!
மண்ணை இன்று நனைக்காதே
மகிழ்வுடன் பாலர் நாம் கூடி
மணலில் வீடு கட்டிடுவோம்.

சின்னச் சின்ன வீடு இது
சிறுவர் கட்டிய வீடு இது
மழையே மழையே நீ போ
மெத்த இன்று பெய்யாதே
மணல் வீட்டைக் கரைக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணாத்திப் பூச்சி



வண்ணாத்திப் பூச்சி! வண்ணாத்திப் பூச்சி!!
வண்ண நிறம் கொண்ட பூச்சிகளாம்
எங்கே நிறங்கள் நீ பெற்றாய்
எனக்கு இப்போ சொல்லாயோ?

பட்டு வண்ணப் பூச்சிகளே!
பார்வைக்கு அழகுள்ள பூச்சிகளே
எட்டி நின்று உன்னைப் பார்த்தால்
ஏங்கிப் பறந்து போவீர்கள்

பறந்து பறந்து திரிகின்றீர்
பூவினில் தேன் குடிக்கின்றீர்
பாலர் நாம் அழைக்கின்றோம்
பக்கம் ஏனோ வரமாட்டீர்?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி










கோழி கோழி வா வா வா..
கொக்கரக்கோ என்றே ஓடிவா
குஞ்சை எங்கே காணேமே
கூட்டில் அடைத்து விட்டனரோ?

பருந்தை வானில் கண்டீரோ
பதுங்கச் சொல்லிக் கொடுத்தீரோ?
"கீச் கீச்" என்றிடும் குஞ்செங்கே?
"கொக் கொக்" என்றே கூப்பிடுவீர்!
எங்கள் வீட்டுக் கோழியே...
குஞ்சுடன் இப்போ ஓடிவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க் குட்டி



நாய்க்குட்டி நாய்க்குட்டி
நான் வளர்த்த நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
நான் விரும்பும் நாய்க்குட்டி

சின்னஞ் சிறிய நாய்க்குட்டி
சிறந்த நல்ல நாய்க்குட்டி
சிறுவன் என்னைக் கண்டவுடன்
"வவ் வவ்" என்றே ஓடிவந்து
வாலை ஆட்டும் நாய்க் குட்டி


அம்மா அப்பா தம்பி தங்கை
அனைவரும் விரும்பும் நாய்க்குட்டி
எந்தனுக்கு நல்ல நண்பன்
இந்தச் சிறிய நாய்க்குட்டியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவே பால் தா!




பசுவே! பசுவே!! பால் தாராய்
பாலர் நாங்கள் பருகிடுவோம்
பச்சைப் புல்லை உனக்களித்தே
பைந்தமிழ்ப் பாடல் பாடுவோம்
பாசத்தோடு கன்றினையே
பரிவாய் கத்தி அழைப்பாயே
பாதிப் புல்லை வாயினிலே
பற்றி மெல்லக் கடித்துக் கொண்டு
பாய்ந்து துள்ளி வந்திடுமே
பிரியமுள்ள உன் கன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுவோமே ஊஞ்சல்




ஆடுவோமே ஊஞ்சல் ஆடுவோமே
ஆனந்தமாய்க் கூடி ஆடுவோமே
அனைவரும் சேர்ந்து ஆடுவோமே
அன்பாய்க் கூடி ஆடுவோமே
அசைந்தே மரமும் அதிர்ந்திடவே
விசையாய் ஊஞ்சல் ஆடுவோம்
ஆடிப் பாடிக் களைத்தவுடன்
ஓடி வீட்டுக்குப் போவோமே
நாடியே அன்னை எமைத் தழுவி
வேண்டிய உணவு தருவாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழா



திருவிழா பார்க்கச் சென்றிடுவோம்
வாருங்கள் எங்கள் தோழர்களே
பெருவிழாவாம் தேர்த்திருவிழா
ஊரார் திரண்டு வரும் திரு விழா
ஒரு தரம் அங்கே பார் தேரை
உருவமே மின்னும் வண்ணங்களே
அருகே சென்று பார்த்திடுவோம்
உருவே ஒளியாய் வீற்றிருக்கும்
அருளாளன் ஆனைமுகனின்
கருணை வேண்டித் தொழுவேமே
கடலை மிட்டாய் வாங்குவோம்
காரும், பொம்மையும் வாங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வளர்வோம்




கல்வி கலைகள் கற்றிடுவோம்
கற்றோர் சொற்படி நடந்திடுவோம்
பொய்யும் களவும் நாமறியோம்
மெய்வழி என்றும் வளர்ந்திடுவோம்.

உழைத்தே உண்டு மகிழ்ந்திடுவோம்
ஊரார் மெச்ச வாழ்ந்திடுவோம்
அன்பு நேர்மை கைக்கொள்வோம்
அன்னை தந்தையைப் போற்றுவோம்
ஆலயம் நாம் சென்றிடுவோம்
ஆண்டவனை நாம் வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை




உயர்ந்த குடை விரித்தது போல்
உன்னடியில் நிழல் பரப்பி
உயர்ந்து நிற்கும் தென்னையே!
நெடிதுயர்ந்து நிற்கிறாயே!
நிறைய தேங்காய் சுமந்தனையே!

தாகம் எமக்கு ஏற்பட்டால்
தணிக்க இளநீர் தருவாயே
நாங்கள் முன் வார்த்த நீரினையே
நயமாய் எமக்கு அளிப்பாயே.
நன்றி மறவாது நீ நின்று
நானிலத்தில் புகழ் பெற்றனையே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டி



எந்தன் இனிய நண்பனும்
என்னருமைப் பூனைக்குட்டி
பஞ்சு போன்ற மேனியனாய்
பதுங்கிப் பதுங்கி வருவானும்
இரவில் விழித்தே இருப்பானும்
அரவம் கேட்டால் பாய்ந்தோடி
துரத்திப் பிடித்த எலி தனையே
தனது வாயிற் கௌவியே
ஆசை தீர உண்பானும்.
உண்ட மயக்கம் உடன்தீர
ஏறிக் கட்டிலில் துயில்வானும்
எந்தன் இனிய நண்பனிவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாவை




எனது இனிய பாவை
அம்மா தந்த பாவை
வண்ணச் சட்டை அணிந்த
வடிவான என் பாவை.
சின்னக் கையும் காலும்
கன்னக்குழிவும்சிரிப்பும்
நான் விரும்பும் பாவை
நல்ல அழகுப் பாவை.
என்னுடன் துயிலும் பாவை
எனக்கினிய பாவை
கண்ணே மணியே என்பேன்
கட்டி முத்தம் கொடுப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழம்



மாம்பழம் இனிய மாம்பழம்
மஞ்சள் வண்ண மாம்பழம்
மாம்பழம் இதோ மாம்பழம்
மணம் பரப்பும் மாம்பழம்

மகிழ்வுடன் விரும்பியுண்ண,
மாமா மாம்பழம் எமக்களித்தார்.
தின்னத் தின்ன இனித்திடுமே-நாம்
தின்ற வாயும் மணந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நாம்









ஒற்றுமை எங்கள் உயிர் நாடி
அன்பே எங்கள் இதய நாடி.
பாடிப் பாடி மகிழ்ந்திடுவோம்
ஓடியாடி நாம் களிப்போம்.
கூடிப் பேசிக் குதித்திடுவோம்
வாடியே நிற்கும் நிலைதவிர்ப்போம்
இணைந்து வாழ்வோம் அன்பை நாடி,
எப்போதும் படிப்போம் அறிவை நாடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவே!





நிலவே நிலவே நில்லாயோ?
நான் கூறும் செய்தி கேளாயோ?
நீண்ட தூரம் போகின்றாயோ?
நிழல் போல் என்னைத் தொடர்வதேனோ?

உன்னெழில் கண்டு அமுதுண்டோம்-அன்று
உயர்ந்த வானில் நீ ஜொலித்தாய்.
உன்னிடத்தில் மானிடர் தம்
அடி பதித்தது இன்று புதுமையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று



காற்றே பலமாக வீசாதே!
கண்ணில் மண்ணைத் தூவாதே
கனி மரங்களை முறிக்காதே
கூரையைக் கிளப்பி எறியாதே
ஏழை மக்கள் வீடு நோக்கி
ஏற்றமாய் வீசி அழிக்காதே
கடலை நம்பிடும் மக்களுக்கு
கருணையை என்றும் காட்டிவிடு.
மாடி வீட்டுச் சுகபோகர்களின்
மாளிகைப் பக்கம் நீ போ! போ!
காற்றே சுழன்று வீசாதே,
சீற்றமும் நீ கொள்ளாதே
தோற்றம் எதுவும் உனக்கின்றி
சுற்றி உலகினை வருவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லன செய்வோம்



சிறுவர் சிறுமியர் கூட்டம் நாம்
சிரித்து மகிழும் பிள்ளைகள் நாம்
அன்னை தந்தையை மதித்து நாம்
அன்புடன் நடக்கும் பாலர் நாம்

தூயவுள்ளம் கொண்டோம் நாம்
துயருறும் ஏழைக்கு உதவிடுவோம்
பொறாமை வஞ்சகம் நாமறியோம்
பாதகம் செய்வோர்க்கு குழிபறிப்போம்

கல்வியைக் கண்ணெனக் கற்றிடுவோம்
கற்போர் பாதையில் நாம் நடப்போம்
நேர்மையாய் தொழில்கள் செய்திடுவோம்.
நாட்டுக்கு நல்லன செய்வோம் நாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய் கறித்தோட்டம்



காய்கறித் தோட்டம் பார் கண்ணு
காயும் பிஞ்சும் பார் கண்ணு
கத்தரி வெண்டி தக்காளி
இத்தனை செடிகள் பார் கண்ணு.

கத்தரிப் பூவிது ஊதா நிறம்
தக்காளி பூவோ மஞ்சள் நிறம்

மிளகாய் பூவோ வெள்ளை நிறம்
வெண்டிப் பூவிது மஞ்சள் நிறம்.

அப்பா அண்ணு ஆசையுடன்
அமைத்த வீட்டுத் தோட்டம்.. பார் கண்ணு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு




தம்பி! தம்பி!! புத்தாண்டு
தாத்தா சொன்னார் நாளையென்று
வருடம் தோறும் வருகிறது.
விரும்பி நாமும் மகிழ்ந்திடுவோம்
தம்பி! உனக்குப் புதுச்சட்டை
தருவார் அப்பா தப்பாமல்
சித்திரை மாதம் வருகிறது
சிந்தை மகிழச் செய்கிறது
வாய்க்கு இனிய பலகாரம்
வகையாக அம்மா தந்திடுவார்
புத்தாண்டில் எவை செய்திடினும்
எத்தடையும் அதில் வராதாம்
சித்தம் குளிரும் புத்தாண்டே
சிறுவர் உம்மை அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொங்கல்



பொங்கல் இனிய பொங்கல்
புத்தமுதப் பொங்கல்
இல்லங்களின் முன்னே
கோலங்கள் அழகு என்னே!
புதுப்பானை ஏற்றி அன்று
பசுவின் பாலை ஊற்றி
புத்தரிசி பொங்கிட
பரிதியின் உதயம் தள்ளி
பொங்கலோ பொங்கலென்று
மங்களங்கள் பொங்குவென
மனையிலுள்ளோர் சொல்ல
பட்டென பட்டாசு வெடிக்க
கதிரவனுக்கு நன்றி கூறியே
காலையில் வணங்கித் துதிப்போம்
ஆலயம் நாடிச் சென்று
ஆண்டவன் கழல் தொழுவோம்.
பொங்கல் இனிய பொங்கல்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிக்கூடு



ஓயாமல் அவன் ஓடிடுவான்
இரவு பகலென்று பார்த்திடான்
அனைவரும் அவனை வைத்திருப்பர்
அவனே நேரம் உணர்த்திடுவான்.


ஒலிப்பான் சத்தம் "டிக் டிக்" என்றே
ஓயாமல் அது கேட்டிடுவோம்
நேரத்தை தவறாது காட்டிடுவான்
நேரிய கம்பி இரண்டுடையான்

எல்லோரும் அழைக்கும் மணிக்கூடு
அன்றாடம் அவசியம் அவன் சேவை
பல்வின உருவில் அவன் உடையான்
பாரினில் அவனுக்கோ தனிப்புகழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்





ஒன்றே தேவன் உலகினிலே
இரண்டு கண்கள் முகத்தினிலே
மூன்று சங்கம் தமிழினிலே
நான்கு வேதம் நம் மதத்தினிலே
ஐந்து புலன்கள் மெய்யினிலே
ஆறு சுவைகள் உணவினிலே
ஏழு கடையெழு வள்ளல்களே.
எட்டுக் குணங்கள் இறைவனுக்கே
ஒன்பது தொகை தான் நவரத்தினமே
பத்து விரல்கள் நம் கையினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனே! நீ





சூரியனே நீ வருகின்றாய்
சுடராக எங்கும் ஒளிர்கின்றாய்
ஒளியை எமக்கு தருகின்றாய்
உனக்கு நன்றி சொல்வோமே.
உழவர் திருநாள் தைப்பொங்கல்
அந்த நாளில் உந்தனுக்கே,
அனைவரும் நன்றி கூறுகின்றோம்.
தோன்றி மறைந்து வருகின்றாய்-உன்
தோற்றத்தை ஒரு தரம் சொல்லாயோ!
வான வெளியில் உலாவுகின்றாய்
வண்ண வெளியில் மிதக்கின்றாய்
ஒளிப் பிழம்பாய் மின்னுகின்றாய்
உந்தன் பிறப்பு என்னவோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புகழ் சேர்ப்போம்



காலையில் நாம் எழுந்திடுவோம்
காலைக் கடன்தனை முடித்திடுவோம்
கடவுளை நினைந்து வணங்கிடுவோம்
கல்விக் கூடம் சென்றிடுவோம்
பாடம் நன்றாய்க் கற்றிடுவோம்
அறிவுடைப் பிள்ளைகள் நாமென்றே
அடுத்தோர் கூற வாழ்ந்திடுவோம்
அன்னை தந்தை சொல்கேட்போம்
அவர் தம் ஆணை செவி மடுப்போம்
உத்தமராக நாம் வாழ்ந்து
எம் நாட்டுப் புகழ் சேர்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லம்



நாங்கள் வாழும் இல்லம்
நல்ல அழகு இல்லம்
வானை முட்டும் இல்லம்
வண்ணச் சாந்து இல்லம்

அம்மா அப்பா எல்லோரும்
அன்புடன் வசிக்கும் கோயில்
இல்லம் எங்கள் இல்லம்-எம்
இதயம் அன்பின் வெள்ளம்.

அப்பா தருவார் செல்வம்
அம்மா அளிப்பார் வெல்லம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழை மரமே



சந்ததி போற்றும் வாழையே
சிந்தை இனிக்கும் பழம் தந்தாய்
எந்தன் மனமோ? துயர் இன்று
வீழ்ந்தாய் மண்ணில் தலைவிரித்து.

கூரிய வாள் கொண்டு வெட்டினரோ?
கூற்றுவன் உனக்கு குலைதானோ?
வாழும் போதும் பயன் கொடுத்தாய்
மாளும் போதும் பயன் தந்தாய்.

உன்குணம் மானிடர் அறியாரோ?
அறிந்தும் உன்வழி செல்லாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைவிளக்கு வீடியோமலர்
என்றும் உங்கள்
வீடுகளில் ஒளிவீசிக் கலை
விருந்து அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை விளக்கு

மேல் நாட்டுச் சூழ்நிலையில் வாழ்ந்து
கொண்டிருக்கும் தமிழர்தம் மனங்களில்
சுடர் விட்டு ஒளிரட்டும் இக் கலைவிளக்கு



பத்திரிகைத்
தொடர்புகளுக்கு

**S.Packiyanathan**
**Droote-13**
**44328 Dortmund**
**Germany**

PHOTO COPIES ARE FREELY DONE BY

**CARITAS**

OF DORTMUND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org